
இதழ்-07

# ஆனந்தம்

இலவச இதழ்

பல்சுவை விளம்பர சஞ்சிகை




சஹ்ரா
ரெயிலர்ஸ்
Specialist
Wedding Suits
& Expert
Gents Tailors
No.122, Grand Bazaar,
Jaffna.
Naizar-0719192908





கிருபா லேணர்ஸ்
LEARNERS Driver Training
Regd No. Ds/589, Kiruba Learners, Govt. Approved
A Grade Driving Training School
Call 021 222 4353 021 492 3200,0777225292
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

எமது வாடிக்கையாளர்களுக்கு கடந்த 35 வருட அனுபவத்தின் பாதையில்
புதிய அம்சங்கள் சிறந்த சேவைகள் வழங்கும் உங்கள் நம்பிக்கையான

# ROYAL SERVICE STATION



அதி நவீன முறையில்

* Wheel Alignment
* Wheel Balance
* Tire Changing/ Fitting
* Nitro gas System ($N_2$)
* Interior Cleaning



உள்ளடங்கிய தொழில்நுட்பத்துடன் கூடிய சேவைகள் 01.06.2015 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

01. One vehicle service one wheel aligment free (நிபந்தனைக்கு உட்பட்டது)
02. விசேட தேர்ச்சி பெற்ற 28 வருட அனுபவம் வாய்ந்த Wheel master suto Tech தொழில் நுட்பவியலாளரால் பயிற்சியாளர் Wheel Aligment பார்த்துக் கொடுக்கப்படும்.
03. அத்துடன் TATA, DIMO,FOTON, United Motors, Mitsubishi (Fuso) வடமாகாண ஏக முகவர் அனுமதியைப் பெற்றிருக்கின்றது. என்பதை பெருமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

ROYAL SERVICE STATION
K.K.S. ROAD,CHUNNAKAM,JAFFNA.
TIME: 7am-7.30pm

TOYOTA FUSO TATA dimo SUZUKI

அனைத்து சகல வாகனங்களினதும் தரமான உதிரிப்பாகங்கள்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
TATA,Dimo,Maruti,Suzuki,Toyota, Fuso,Genune Parts.
Sai Raam Motors No.2, K.K.S Road,Chunnakam. T.P:-021 224 1568

பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
T.P:-021 224 1090, 077 601 3568


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# Lathihash Power Island Gym

## Body Building & Fitners Centere

இலங்கை உடக்கட்டமைப்பு விருத்தி மற்றும் சம்மேளத்தின் அங்கீகாரத்துடன் தேர்சி மிக்க பயிற்றுவிப்பாளர்களினால் நடாத்தப்படும் உடற்பயிற்சி நிலையம்







எம்மால் வழங்கப்படும் சேவைகள்.

01. உடல் எடை குறைத்தல்(**Weight Loss**)
02. உடல் எடை அதிகரித்தல் (**Weight Gaining**)
03. உடற் கட்டுமான உடற்ப்பயிற்சி செயற்ப்பாடுகள் (**Body Building**)
04. வயிறு குறைத்தல் அடிவயிறு சார்ந்த கூட்டு செயற்ப்பாடுகள் (**Six Pach**)
05. நவீன வசதியுடன் கூடிய உடற்ப்பயிற்சி எந்திரங்கள்
06. ஆடை மாற்றிக்கொள்வதற்கான அறை வசதிகள் & வாகனத்தரிப்பிடவசதி
07. U.S.A (அமெரிக்காவில்) இருந்து தருவிக்கப்படும் விற்றமின் கனியுப்படங்கிய போசாக்குப்பொதிகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

நீங்கள் விரும்பியவாறு கவர்ச்சிகரமான சிறந்த உடலமைப்பை பெற்றுக்கொள்ள முடியும்

**MON- SAT : OPEN TIME - AM 5.00 - 12.00**
**- PM 3.30 - 10.30**
**SUNDAY - AM 5.00-12.00**



வெலிங்டன் சந்தியில் இருந்து 200M தூரத்தில் (பெருமால் கோவிலுக்கு அருகாமையில்)

No,395 1/1 Clock [illegible] Jaffna

Director: Thushyanthan
T.p: 0771112145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


ஆனந்தம்
முருகா
எம் இனிய வாசகர்கள்,விளம்பரதாரர்கள் பக்தகோடிகள்,
அனைவருக்கும் தேரேறிவரும் நல்லூர் கந்தனின்
அருளாசிபெற்று நோய் நொடி நீங்கி அமைதியும் சாந்தோசமும்
பெற்று வாழ ஆனந்தம் சஞ்சிகை நிறுவனத்தினராகிய நாம்
வாழ்த்துக்கின்றோம்.
விளம்பரத் தொடர்புகளுக்கு: 077 28 50 490

# Jazeemas Curtain

No,306/308 K.K.S .Road
T.P:- 021 222 1544 Fax 021 221 9860 Mobile:0773608144
E-mail:jpp1952@hotmail.com Web:www.jazeemapicturespalace.com





# Jazeema Picture Palace


T.P:- 021 222 1544 Fax 021 221 9860 Mobile:0777 490282
E-mail:jpp1952@hotmail.com Web:www.jazeemapicturespalace.com

அலுமிக்ஸ் அலுமினியம் எக்ஸ்ருஸன்ஸ்





மக்பிளே பிளேவூட் டோர்ஸ் வீ.ஆர் பிளேவூட் டோர்ஸ்




சட்டர்போட்
பிவிசி போர்ட்
போமிக்கா சீட்
மல்ரிவோண்ட்



ஸ்ரேசன் ஸ்ரீல்
ஐயன் வோக்ஸ்
கார்பென்ரறி கபோட்
ஸ்பிறே பெயின்ரிங்



பிறஸ் கிங்ஸ்
டோர் லொக்
பிறஸ் றபர்வோல்ட்




ஓல் சைஸ் டெம்பர் கிளாஸ்
ஓல் சைஸ் பிளேன் கிளாஸ்
டிசைன் கிளாஸ்

# AJ FABRICATORS

## At FABRICATORS Group Of Company Of Jazeemas

T.P:- 021 222 1544 Fax:-021 222 9860 Mobile:- 0777 358035
E-mail:-laabullah1982@gmail.com Web:www.jazeemapicturespalace.com

- அலுமினியம் டோர்ஸ்
- விண்டோஸ் அன்ட் பார்டிஸன்
- கம்போஸிட்டிவ் வோல் கிளேடிங் அன்ட் ஸ்கைலிட்டி



- கேர்ட்டின் கிளாஸ்
- ரேம்பர் கிளாஸ்
- ஸோவர் கியுவிக்ஸ்
- ஸஸ்பேண்ட் சீலிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ் கலாலயா பயிற்சியகம்

## மகளிருக்காக 4 மாத பயன் மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.





- கேக் ஐசிங் உணவு தயாரித்தல்
- Hair Dresing & Styling (கூந்தல் வடிவமைப்புக்களும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக்கலை (Facials)
- Pedi cure Main cure (கைகள், கால்கள், நகங்கள் அழகுபடுத்தல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைப்படி மணப்பெண் அலங்காரம் வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்

மேற்படி அனைத்துப் பயிற்சி முடிவிலும் சான்றிதழ் வழங்கப்படும்

- (B) பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ் சுரிதார் தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள் (கிழமை நாட்களில் மட்டும்)
- சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

விக்டோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ் போதனா வைத்தியசாலை பின்புற வீதி,யாழ்ப்பாணம்.)

# அக்ஷயா பிறிண்டேர்ஸ்











திருமண அழைப்பிதழ்கள்,பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள்,
பிறந்தநாள் அழைப்பிதழ்கள்,திருமண பரிசுப் பொருட்கள்,
கேக் பெட்டி, தாம்பூலப்பை, குடம், ஊஞ்சல்,
தேவையான பொருட்கள் என்பவற்றை பெற்றுக் கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

இல,230,கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணம். தொ.பே:-077 3574458,077 8888372

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நல்லூர்

அடியேனது மனதில் தவத்திரு சிவயோக சுவாமிகளின் எண்ணத்தை ஊட்டியவர் அளவெட்டி ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் ஆச்சிரமத்தில் அமைச்சராகப் பணிபுரிந்த மறைந்த சிவத்திரு. சோ. சுண்முகசுந்தரம் அவர்களாவார். அடியேனது சொந்த ஊரான மூளாயில் அடியேனது பொறுப்பில் இயங்கிய இந்து சமய மன்றத்தின் மூலம் அவர்களுடன் நாம் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டோம். இந்து சமய மன்றத்தை ஆரம்பிக்க உதவிய மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்மவள்ளல் அமரர் க. கனகராசா அவர்களையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துவது எனக்குரிய கட்டாய மான பணியென அடியேன் மனதார நன்றியுடன் எண்ணுகின்றேன். காரணம் அடியேனது சமய, சமூகப் பணிகளுக்கு மிகவும் ஊக்கம் அளித்தவர்களுள் அவரும் குறிப்பிடத்தக்கவர். அவர் மாத்திரமல்ல சிறுவயதிலிருந்து சமயத்தைப் போதித்த அத்தனை ஆசிரியர்களுக்கும் வழிகாட்டிய பெரியோர்களுக்கும் அடியேனது மானசக மான நன்றியுடன் கலந்த வணக்கங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிக்காட்டுவதில் பெரிதும் மனநிறை-வடை கின்றேன்.)

பின்னர் எமது மன்றத்தை இந்து இளைஞர் மன்றத்துடன் இணைத்துக்கொண்டபின் அவரது உத வியாளராக நான் அளவெட்டி ஆச்சிரமத்தில் பணியாற்றிய போது குருதேவர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளைப் பற்றியும் அவரது சற்குரு-தவத்திரு சிவயோக சுவாமிகளைப்பற்றியும் எனக்கு தெளிவுறவைத்தார். அந்தக் குருபரம்பரையை மானசீகமாக எனது மனம் வழுத்தவும் நாடவும் தொடங்கியது. தவத்திரு சிவயோக சுவாமிகளின் நான்கு மகாவாக்கியங்களும் என்னை மிகவும் கவர்ந்தன.

**"ஒரு பொல்லாப்பும் இல்லை.**
**எப்பவோ முடிந்த காரியம்.**
**நாமறியோம்**
**முழுதும் உண்மை."**

இன்றும் அந்த மகா வாக்கியங்கள் அடியேனது உயிருடன் கலந்திருப்பதைச் சொல்லியே ஆகவேண்டும். அடியேனது வாழ்வில் சமய அறிவை வளர்க்கப் பெரிதும் உதவிய – மிகவும் பெருமைப்படவேண்டிய ஒருவரென்றால் எனது தாத்தா அமரர் மு. வல்லிபுரம் அவர்கள்தான். சிறு குழந்தையாக இருக்கும்போது என்னைக் கைப்பிடித்து மூளாய்ப் பிள்ளையாரிடமும் முருகனிடமும் கூட்டிச் சென்ற பெருமை அவருக்கே உரியது. அவரது வழிகாட்டலும் அறிவுரையும் என்னை இன்றும் நல்வழிப்படுத்துவதை நான் மனதார உணரக் கூடியதாகவிருக்கிறது.

தவத்திரு சிவயோக சுவாமிகளைப்பற்றிய எண்ணம் ஏற்படும் ஒவ்வோர்கணமும் நல்லூர் முருகனுடைய எண்ணமும் தானாகவே தோன்றும். அடியேனது அனுபவத்தையே இக்கட்டுரையில் வெளிப்படுத்த முனைகின்றேன். சிவபூமி என அழைக்கப்பட்ட எமது நாட்டில் நடைபெறும் அதர்மங்கள் எப்போது முடிவுக்கு வரும் நாம் எப்போது முன்னர்போல சுதந்திரமாக எமது ஊர்களில் உலவமுடியும் என்று ஆதங்கப்பட்டவர்களில் நானும் ஒருவனே! அதுவும் நல்லூர் முருகனுடைய திருவிழா என்றால் யாழ்ப்பாண நகர்மட்டுமல்ல குடாநாட்டுக்கு வெளியே இலங்கை பூராவுமிருந்து முருக பக்தர்கள் சண்முகப்பெருமானுடைய அழகுத் திருக்கோலம் காண ஆவலோடு நல்லூரை நாடிவருவதை யாரும் மறுத்துரைக்கமாட்டார்கள். 27 நாட்கள் மிகவும் பக்தி பூர்வமாக வயது வேறுபாடின்றி அதிகாலை முதல் இரவுவரை அடியார்கள் தமிழ்க்குடிக்குக் குலதெய்வமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எந்த ஆலயத்திலும் இல்லாத ஒரு அற்புதமான ஏற்பாடு இந்த ஆலயத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது மூலஸ்தானத்தின் விம்பமானது கொடிமரத்திற்கு நேராக இருக்கும் செங்கோண முறை வேறு எங்கும் இல்லை! இதனால் மகோற்சவ காலத்தில் நடக்கும் தம்ப பூஜைக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு அதுபோல யாகத்திலிருக்கும் கும்பத்திற்கு ஆராதனை நடக்கும் சமயத்தில் வேற் பெருமான் எழுந்தருளி யாக பூஜையை ஏற்கும் போதும் கொடித்தம்பத்திற்கு நேராக சுவாமி நின்று பூஜை ஏற்பதும் ஒரு விசேடமான முறையே! மூலவர் – கொடிஸ்தம்பம் – எழுந்தருளி விம்பம் – திக்குப் பலி ஏற்கும் அஸ்திரதேவர்! குரு, யாகாக்கினி, கும்பம் என்ற மகோற்சவ காலத்தில் இறைவன் சாந்நித்தியம் கொண்டுள்ள அனைவரும் ஒரு நேராக இருப்பதும் சிறப்புக்குரியது!

30 வருடங்களுக்கு முன்பு நடந்த ஓர் உண்மைச் சம்பவம்! திருவிழா நிறைவு பெறும் தீர்த்தத் திருநாள்! நல்லூர் ஆதீனத் தொண்டராக, யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டராக பணிபுரிந்த காலம்! அதிகாலை 4.30 மணிக்கு நாம் கோபுர வாசலுக்கு வந்தபோது என்றுமில்லாதவாறு கோபுரக் கதவுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தது! பக்தர்கள் எல்லோரும் முருகனைப் பார்க்கும் ஆவலில் கதவை அடைத்துப் பிடித்து மனமுருகி வேண்டிய வண்ணம் இருந்தார்கள். விபரமறிந்தபோது ஆலய வளாகத்தினுள் குண்டு வைக்ககப்பட்டதாக ஒரு வதந்தி! கோபுரச் சுற்றுகளில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தேடுதல் நடத்தியபடி இருந்தனர்.

ஆலயத்தினுள் வழமையான பூசை ஏற்பாடுகள் நடந்தபடி இருந்தது! பூசகர்கள் அங்குமிங்கும் முருகனுக்கு முன்பாக போகும்போதெல்லாம் பக்தர்கள் அரோகரா அரோகரா என கூக்குரலிட்ட வண்ணம இருந்தனர்! அடியேனுக்குப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கூட்டத்தை விலக்ககி கோபுர வாசல் கதவுக்கு முன்பாகச் சென்று பக்தர்களிடம் அமைதியாக அமருமாறு வேண்டினேன். பலரும் அமர ஒருவர் மட்டும் இருத்தி என்ன சாதிக்கப் போகிறீர்கள் என வாதிட்டார் அடியேன் அவருக்குச் சொன்னேன்! நாம் முருகனை மனதார வேண்டி பிரார்த்தித்தால் தீர்த்தத்தை பார்க்க சந்தர்ப்பம் கிடைக்கும் – சற்றுப் பொறுமையாக அமைதியாக இருந்து மற்றவர்களும் உள்ளே நடப்பதைப் பார்க்க உதவுமாறு வேண்ட அவரும் பின்பு அங்கிருந்து விலகி அடியவர்கள் உள்ளே நடப்பதைப் பார்க்க உதவியதும் சிறிது நேரத்தின் பின் அங்கு எந்தவிதமான குண்டும் இல்லையெனத் தெரிவித்தபின் இயல்பாக தீர்த்த உற்சவம் நடைபெற்றதும் மறக்க முடியாது!

இந்திய இராணுவ முற்றுகையின் போது அகதிகள் ஆலயத்தில் தஞ்சமடைந்திருந்ததும் – அவர்களுக்குரிய உணவு – மருத்துவ வசதிகளில் தொண்டர்கள் பங்கு கொண்டதும் ஒருபோதும் மறக்க முடியாது!

கங்காநதி பாலனான மயிலேறிய சேவகனை ஞானசக்தி வடிவாகிய வேலின் ரூபத்தில் காணும் கண்கொள்ளாக் காட்சி அற்புதமானது! சாகாது எனையே சரணங்களிலே காத்த வேற்கொடி வீரா என் விண்ணப் பத்தை நீ எப்போது ஏற்றுக் கொள்வாய். யோகர் சுவாமிகள் கூறியதுபோல வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால் வில்லங்கம் எல்லாம் இல்லாமல் போமே என்ற கூற்று அடியேனுக்கு எவ்வளவு தூரம் பொருந்தியது என்பதை நான் சதா நேரமும் நினைந்த வண்ண மிருக்கிறேன்.

எந்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீயுமான முருகா எனது மனக்கவலைகளை நீக்கி அருள்புரிவாயாக என்று மன்றாடி மனதால் பிரார்த்திக்கின்றேன். உமையாள் குமரா மறைநாயகா சற்குருநாதா குலிசாயுதா குஞ்சரவா சிவயோகா உன் தாழ் பணிந்து வேண்டுகிறேன் எம் மக்களின் இடரை அகற்றி நல்வாழ்வைத் தருவாயாக!!!
மதிகெட்டு அறத்தை மறந்து வீணான ஆசைகளால் மனம் மயங்கி எம் மக்கள் படும் அவலத்தை எவ்வாறு நீ பார்த்துக் கொண்டு எதுவுமே செய்யாமல் இருக்கிறாய்
மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார் கின்னம் களையும் கிருபை சூழ் சுடரே எம் மக்கள் படாதபாடுபட்டு விட்டார்கள்.தமிழ் மக்கள் வாழ்ந்த அந்த உயர்ந்த நிலையை தமிழ்த் தெய்வமே வழங்கி அவர்கள் வீணாகக் கெட்டு அழிய விட்டுவிடாதே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நியூ பெஷன் மொபைல்

இன்று பல ஆயிரக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
விருப்பமான மொபைல் சொப்



உலகில் அதிகளவில் விற்பனையாகின்ற முன்னணி வாய்ந்த கைத்தொலைபேசிகளை
வாங்குகின்ற அதே வேளை பழுதடைந்த கைத்தொலைபேசிகளை
தேர்ச்சி மிக்க திருத்துனர்களால் திருத்திப் பெற்றுக் கொள்ளலாம்.




No, 281B Clock Tower Road, Jaffna.
Tel: 077 809 8327 / 077 809 7771


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# Cosy

# HOTEL & RESTAURANT

## North Indian,Punjabi,Chinese& Jaffna Foods

Freee Home Delivery (Limited Area)

Open Daily:11.a.m to 11.00 p.m

We Accept all Credit Cards





உங்கள் வாழ்வில் நிகழும் ஒரு அற்புத தருணம் உங்களை தேடி வந்திருக்கின்றது

**கொசி** ஹோட்டல் அன்ட் ரெஸ்ரோரண்ட் நிறுவனத்தினருடைய

**டிராவல் அன்ட் ரூர்ஸ்** வழங்கும்

# காசி யாத்திரை

உங்கள் நேசத்திற்குரியவர்களுடன் இறைவேண்டுகையை மனதிலிருத்தி தெய்வீக இறைநாமங்களுடன் **12** நாட்கள் காசி யாத்திரை சென்று வரலாம்.

பக்த அடியார்களாகிய உங்களது மனங்கள் தரிசிக்கும் இடங்கள்

**காசி இந்துக்களின் புனிதத்தலம்**

**காசி**





**திருவேணி சங்கமம்**

மூன்று நதிகள் சங்கமிக்கும் இடம்

**புத்தகாயா**

புத்தர் கோவில் பன்னாட்டு புத்தர் கோவில்கள்



**மதுரா அலகாபாத்**

ஸ்ரீகிருஷ்ணர் பிறந்த மதுரா கோவில்

**சென்னை**

**தாஜ்மஹால்**

சுலபமான இறை தரிசிப்போடு உலகமே போற்றும் அன்பின் அடையாளமாகிய தாஜ்மஹாலையும் நீங்கள் பார்க்கலாம்.



அருமையான இந்தச் சந்தர்ப்பத்தைத் தெய்வீக நல்லாசிகளுடன் பயன்படுத்துங்கள்.
உங்களுக்கான காசிப் பயணம் நீங்கள் வேண்டுகின்ற வேண்டுகைகள் யாவும் இறை நல்லாசிகளுடன் நிறைவாகக் கிடைக்கும்.

யாழிலிருந்து ஆரம்பிக்கும் இந்தப் பயணம் மீண்டும் யாழ் வரும் வரைக்கும் உங்களுக்கான

- வீசா,
- விமானப் பயணச் சீட்டு,
- ரயில் பயணங்களுக்கான சீட்டு,
- பஸ் கட்டணங்கள்,
- உணவு, தங்குமிட வசதிகள்

**89,900/-** மட்டுமே

அனைத்தும் அடங்கலாக ஒரு நபருக்கு அறவிடும் தொகை

உங்கள் பயணத்திற்கான சிறப்பான அனுகூலங்களைத் தருகின்ற

**எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.**


*புண்ணியம் தேடித்தரும் காசிப் பயணம்*
*நீங்கள் எடுக்கின்ற காரியங்கள் அனைத்திலும்*
*வெற்றிகளைத் தேடித்தரும்!*

# 272, Stanley Road,Jaffna. Hotlines:T.P 021 222 7100, 021 222 5899

www.cosylanka.com, info@cosylanka.com www.facebook.com/cosy.cosy.167

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காசி யாத்திரை பாவம் தீர்க்குமா?



**கேள்வி:** புண்ணிய நீராடி, திருக்கோயில்களில் வழிபட்டால் எல்லாம் சரியாகிவிடும், பாவம் தீர்ந்துவிடும் என்று ராமேஸ்வரம் தொடங்கி காசி வரை யாத்திரை செல்கிறார்கள். காலம் காலமாக போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். பிரச்சனைகள் மட்டும் தீரவில்லை, எப்போது தீரும் எப்படித் தீரும்?

**சத்குரு:** பிரதிஷ்டை செய்யும் விஞ்ஞானத்தின் துணையோடு, நம் நாட்டில் பல சக்தியூட்டப்பட்ட ஸ்தலங்கள், கோயில்கள் உருவாக்கப்பட்டன. சக்தியூட்டப்பட்ட இந்த இடங்களுக்குச் சென்றால், அத்தகைய சூழலில் சிலநாட்கள் வாழ்ந்தால், நமக்குள் இருக்கிற கோபம், வெறுப்பு, மனத்தடைகள் இவற்றைத் தாண்டி வளரமுடியும் என்ற நோக்கத்தில்தான் தீர்த்த யாத்திரைகள் நமது கலாச்சாரத்தில் மேற்கொள்ளப்பட்டன. காசியில் முக்தி, தீர்த்தயாத்திரைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது காசி யாத்திரை. பல்லாயிரம் ஆண்டுகளாகவே உண்மை உணர்ந்த ஞானிகளும், யோகிகளும் இந்த இடத்தில்தான் ஒன்று சேர்ந்தார்கள். ஆன்மீகரீதியாக எதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றாலும் அதற்கான உறைவிடமாய் காசி இருந்தது. அதனால் தான் "காசிக்குப் போனால் முக்தி கிட்டும்" என்றார்கள். அவ்விடங்களுக்குச் செல்லும் போது, அர்ப்பணிப்பு உணர்வோடு, எளிமையான மனநிலையில் செல்ல வேண்டும். காசிக்குப் போனால் அங்கே எதையேனும் விட்டுவிட்டு வரவேண்டும் என்பது நம் வழக்கத்தில் உண்டு. நம்மில் பலர் அங்கே சென்று பாகற்காயை விட்டுவிட்டு வருகிறார்கள். பாகற்காயை விடுவதில் பிரயோஜனமில்லை. உங்களுக்குப் பிடிக்காததை விடுவது மிக எளிது. நீங்கள் எதன் மீது பற்றாய் இருக்கிறீர்களோ அதை விட்டுவிட்டு வரவேண்டும். உங்கள் பற்று, உங்கள் குழந்தையின் மீதோ, கணவர் மீதோ, மனைவியின் மீதோ இல்லை. "நான்" என்கிற உங்கள் நினைப்பில் தான் நீங்கள் அதிகமாகப் பற்று வைத்திருக்கிறீர்கள். உங்கள் கோபம், உங்கள் அகங்காரம், "இது பிடிக்கும், அது பிடிக்காது" என்ற எண்ணங்கள், அது உண்டு செய்யும் உணர்வுகள் என இவற்றின் மீதுதான் உங்களுக்கு அதிகமாக பற்று இருக்கிறது. இவை தான் உங்கள் வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது. காசிக்குப் போனால், உங்கள் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் இவற்றில் எதையேனும் தான் விட்டுவிட்டு வரச் சொன்னார்கள். சக்தி நிறைந்த ஸ்தலங்களுக்கு செல்லும்போது? அதுமட்டுமல்ல. சக்தியூட்டப்பட்ட இடங்களுக்குச் செல்லும் போது, நம் புரிந்து கொள்ளும் தன்மைக்கு அப்பாற்பட்ட சில நிகழ்வுகள் அங்கே நிகழ வாய்ப்பிருக்கிறது. அதுபோன்ற பல சக்திநிறைந்த, மிகத் தீவிரமான ஸ்தலங்கள் நம் நாட்டிலே உருவாக்கப்பட்டுள்ளன. அத்தகைய இடங்களுக்குச் செல்வது, மனிதனுடைய உள்வளர்ச்சிக்கு நிச்சயம் உறுதுணையாக இருக்கும். அவ்விடங்களுக்குச் செல்லும் போது, அர்ப்பணிப்பு உணர்வோடு, எளிமையான மனநிலையில் செல்ல வேண்டும். இயல்பாகவே அந்நிலை உங்களிடம் இல்லையெனில், "நமக்கும் மேலே மகத்தான சக்தி இருக்கிறது" என்ற எண்ணம் ஒரு பணிவை உங்களிடத்தில் உருவாக்கும். இந்தப் பணிவோடு, அர்ப்பணிப்பு உணர்வோடு அந்த மகத்தான சக்தி ஸ்தலங்களுக்குச் செல்லும்போது, அங்கிருக்கும் சக்தியை நீங்கள் உள்வாங்க இந்நிலை உங்களுக்கு பெருமளவில் கைகொடுக்கும். இப்பிரபஞ்சத்தோடு ஒப்பிடும்போது, நாம் கடுகளவு கூடக் கிடையாது. நீங்கள் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும், இந்த உலகில் உங்களுடைய பங்கு ஒரு எல்லைக்குள் அடங்கக்கூடியது. இதை நீங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி உணர்ந்து கொள்வதற்குத் தான் தீர்த்த யாத்திரைகள் உருவாக்கப்பட்டன. நீங்கள் வருவதற்கு முன்பிருந்தே இந்த உலகம் நன்றாகத்தான் நடந்திருக்கிறது. நீங்கள் இறந்துவிட்டாலும் இந்த உலகம் நன்றாகவே நடக்கும். அதனால் உங்கள் ஆதங்கம் தேவையற்றது. மகத்தான சக்தியினை ஒரு உருவமாகவோ, தீர்த்த நிலையிலோ பிரதிஷ்டை செய்து அதை மனிதகுலத்தின் மேம்பாட்டிற்காக அர்ப்பணித்து இருக்கிறார்கள். இதுபோன்ற இடங்களுக்குச் சென்று, அங்கிருக்கும் சக்தியினை உள்வாங்கி, நாம் பலன் பெறவே தீர்த்தயாத்திரைகள். இதை உணர்ந்து, நம் உயிர்சக்தியை மேல்நோக்கி எடுத்துச் செல்ல இந்த கருவிகளை பயன்படுத்திக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# GEETHAN DECORATION

# கீதன் அலங்கரிப்பு நிலையம்

சகல விதமான பந்தல், சகல விதமான மணவறைகள்
மற்றும் பலூன் அலங்காரம், வாசல் அலங்காரம், மண்டப அலங்காரம்,
மேடை அலங்காரம், மேசை, கதிரை,பாத்திரங்கள், வரவேற்பு விரிப்பு,
பூமாலைகள், திருமண கார், வான் சேவைகள், ஐசிங்கேக் வகைகள்
மற்றும் மங்களகரமான நிகழ்வுகள்க்கு ஏற்ற அலங்கார
பொருட்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.







T.P:- 077 527 36 60
021 205 38 98



geethankondavil
geethandecoration@yahoo.com

காளிகோவிலடி, கோண்டாவில்,
மேற்கு,கோண்டாவில்.

பலாலி வீதி, கோண்டாவில்,
கிழக்கு ,கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# Cool Air Kings

## Auto A/C

குளிர்சாதனப் பெட்டிகள் விற்பனை மற்றும் குளிரூட்டிகள் திருத்துதல் மற்றும் வாகனங்களுக்குத் தேவையான குளிரூட்டிகள் திருத்துதல் போன்ற தரமான சேவைகள் எம்மால் வழங்கப்படுகின்றன.




No 510, Kasthuriyar Road, jaffna. Tel:- 0777 738888


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## அரவிந்த் சாமியை எனக்கு ரொம்ப பிடிக்கும் நயன்தாரா

"தனி ஒருவன்" படத்தில் அரவிந்த்சாமி வில்லனாக நடித்து இருக்கிறார். அவரது நடிப்புக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. அரவிந்த் சாமி குறித்து நயன்தாராவிடம் கேட்ட போது? அரவிந்த் சாமியை எனக்கு ரொம்ப பிடிக்கும். அழகான நடிகர். அவரைப் பிடிக்காதவர்கள் யாரும் இருக்க முடியாது. நான் தனி ஒருவன் படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆனபோது ஜெயம் ரவி கதாநாயகன் என்று மட்டும்தான் தெரியும். இந்த படத்தின் ஷூட்டிங்கிற்கு போன போதுதான், அரவிந்த்சாமி வில்லனாக நடிக்கிறார் என்பது தெரியவந்தது. பொதுவாக படங்களில் கதாநாயகியுடன் வில்லன் நடிக்கும் காட்சிகள் வரும். இந்த படத்திலும் அது போன்ற காட்சி உண்டா என்று டைரக்டர் ராஜாவிடம் கேட்டேன். அதற்கு அவர், 'ஒரே ஒரு காட்சியில் அவருடன் நீங்கள் நடிக்கிறீர்கள்' என்றார். இதனால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அவருடன் சேர்ந்து நடிப்பதற்காக வந்த போது மிகவும் ஆர்வமாக இருந்தேன். அரவிந்த் சாமியுடன் சேர்ந்து நடித்த காட்சிகளில் உற்சாகமாக பங்கேற்று நடித்தேன். அவர் சிறந்த நடிகர்.



## ரஜனியின் கபாலி படத்திற்கு பிரமாண்ட அரங்குகள்

ரஜினியின் "கபாலி" முதல் கட்ட படப்பிடிப்பு வருகிற 17ந் தேதி சென்னையில் தொடங்குகிறது. பூஜைக்கு பிறகு முதல் காட்சி சென்னை விமான நிலையத்தில் நடைபெறும் என்று தெரிய வந்துள்ளது. தொடர்ந்து சென்னையில் படப்பிடிப்பு நடைபெற இருக்கிறது. ரஞ்சித் இயக்கத்தில் உருவாக இருக்கும் இந்த படத்தில் ரஜினி ஜோடியாக ராதிகா ஆப்தே நடிக்கிறார்.

அடுத்து நடைபெறும் படப்பிடிப்பு பூந்தமல்லியில் உள்ள ஈ.வி.பி. ஸ்டுடியோ, சென்னையை அடுத்துள்ள பனைப்பூர், ஆதித்யராம் ஸ்டுடியோ ஆகியவற்றில் நடைபெற உள்ளது. கபாலி படப்பிடிப்புக்காக இந்த இரண்டு ஸ்டுடியோக்களிலும் பிரமாண்டமான அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கதைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ள இந்த "ஷெட்" களில் தொடர்ந்து படப்பிடிப்பை நடத்த திட்டமிடப்பட்டிருப்பதாக படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சென்னைக்கு வெளியே அமைந்துள்ள இந்த ஸ்டுடி யோக்களில் ஏற்கனவே புலி, மாஸ் உள்பட பல முக்கிய படப்பிடிப்புகள் நடந்துள்ளன. இப்போது ரஜினியின் "கபாலி" படப்பிடிப்பும் இங்கு நடைபெற உள்ளது.



## குண்டுப் பெண்ணாக மாறியது எப்படி?? அனுஷ்காவின் பதில்

ஆர்யாவுடன் நடிக்கும் 'இஞ்சி இடுப்பழகி' படத்துக்காக அனுஷ்கா தனது உடல் எடையை அதிகமாக்கி குண்டு பெண்ணாக மாறினார். படத்துக்காக பிரபல ஹீரோக்கள் தங்கள் உடல் எடையை அதிகமாக்கி கொள்வார்கள். பின்னர் எடையை குறைப் பார்கள். கதாநாயகிகள் அனைவரும் உடலை ஒல்லியாக ஒரே அளவில் வைத்துக் கொள்ளத்தான் விரும்புவார்கள். ஆனால் அனுஷ்கா இதற்கு விதிவிலக்கு 'இஞ்சி இடுப்பழகி' படத்தின் பாத்திரத்துக்கு ஏற்ப உடல் எடையை சுமார் 20 கிலோ அதிகமாக்கினார்.

முதலில் அவர் குண்டு பெண்ணாக நடித்த படம் வெ-ளியானபோது 'கிராபிக்ஸ்' என்று தான் அனைவரும் நினைத்தார்கள். உண்மையாகவே அவர் குண்டான விஷயம் வெளியான போது, 'மார்க்கெட்டில்' உள்ள ஒரு நடிகை துணிச்சலாக உடல் எடையை அதிகரித்து இருக்கிறாரே என்று ஆச்சர்யத்தில் வாய் பிளந்தார்கள். இப்போது அவர் மீண்டும் உடல் எடையை குறைத்துள்ளார். தமிழ்

இதற்காக தினமும் 3 வேளையும் அரசி சோறு, ருசியான கூட்டு, குழம்புடன் சாப்பிட்டேன். இது தவிர மாவு சத்து அதிகம் உள்ள உணவுகளை சாப்பிட்டு வந்தேன். உடற்பயிற்சி செய்வதையும் விட்டு விட்டேன். இதனால் உடல் எடை அதிகமானது. என்னைப் பார்த்தவர்கள் பயந்து போனார்கள். ஆனால் எனக்கு எடையை குறைக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. தற்போது 'பாகுபலி 2' படத்தில் நடிக்க இருக்கிறேன். மாவு உணவுகளை குறைத்து, உடற்பயிற்சியை அதிகமாக்கி இருக்கிறேன். படப்பிடிப்புக்கு முன்பு இன்னும் எடையை குறைத்து தயாராகி விடுவேன்.



## கவுண்டமணியுடன் நடிக்க வாய்ப்புக் கேட்ட சிவகார்த்திகேயன்

கவுண்டமணி கதாநாயகனாக நடிக்கும் '49 ஓ' படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. சத்யராஜ் கலந்து கொண்ட இந்த விழாவில் சிவகார்த்திகேயன் பேசியதாவது கவுண்டமணி சார்தான் எங்களைப் போன்ற பலருக்கு ரோல் மாடல். இப்போதும் அனைவராலும் விரும்பப்படும் நடிகர் அவர்தான். நான் 'வருத்தப்படாத வாலிபர் சங்கம்' படத்தில் நடித்த போது, சத்யராஜ் சாரிடம் கவுண்டமணி சார் சொன்ன கிண்டல் பேச்சை கேட்டு தெரிஞ்சுக்கிட்டேன். இப்போது நினைத்தாலும் அவை சிரிப்பை வரவழைக்கும்.

அவரிடம் பேசும்போது, 'உங்களுடைய காமெடிகள் எங்களுக்குள்ளேயே இருக்கு தெரிஞ்சோ, தெரியாமலோ அதை திருடிக்கிட்டு தான் இருக்கோம்' என்றேன். அதற்கு கவுண்டமணி சார், இல்லாதவங்க எடுத்துக்க வேண்டியதுதான்ப்பா' என்று சாதாரணமாக கிண்டல் அடித்தார். என்னுடைய ஆசை இதுதான். சத்யராஜ் சாரும், கவுண்டமணி சாரும் சேர்ந்து ஒரு படம் நடிக்க வேண்டும் முடிந்தால், அதில் எனக்கு ஒரு சான்ஸ் கொடுக்க வேண்டும்.

'49 ஓ' அரசியல் கலந்த விவசாயம் பற்றிய படம் இதை காமெடி கலந்து சொல்ல கவுண்டமணி சாரால் மட்டும்தான் முடியும். அவரை மிஞ்ச இதுவரை யாரும் இல்லை. இனிமேலும் இல்லை. மீண்டும் திரைப்படத்தில் அவரை பார்க்கப்போகிறோம் என்ற சந்தோஷம் எங்கள் எல்லோருக்கும் இருக்கிறது. உங்களை சந்திக்க எனக்கு இந்த வாய்ப்பு கொடுத்த தயாரிப்பாளர் சிவபாலனுக்கு நன்றி. நான் கவுண்டமணி சார் போல பேச வேண்டும் என்று கூட்டத்தில் இருந்து கேட்கிறார்கள். அப்படி பேசினால், 'அதுக்குத்தான் நான் இருக்கேனே. அவன் என்ன பேசுறது என்று கவுண்டமணி சார் சொல்லிடுவாரு' என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# தனி ஒருவன்

## -திரை விமர்சனம்-

நாட்டில் அதிகரித்து வரும் குற்றங்களை முற்றிலுமாக அழிக்க வேண்டும் என்ற லட்சியத்துடன் ஐ.பி.எஸ் பயிற்சி பெற்று வருகிறார் ஜெயம் ரவி. இவரை அதே பயிற்சியில் இருக்கும் நயன்தாரா, காதல் கொள்கிறார். ஆனால், ஜெயம் ரவியோ தனது லட்சியத்தில் தீவிரமாக இருப்பதால் நயன்தாராவின் காதலை ஏற்க மறுக்கிறார்.

ஐ.பி.எஸ். பயிற்சியில் ஜெயம் ரவியுடன், கணேஷ் வெங்கட் ராம், வம்சி கிருஷ்ணன், ஹரிஷ் உத்தமன் ஆகி-யோர் பயிற்சி பெற்று வருகிறார்கள்.இவர்கள் இரவு நேரத்தில் யாருக்கும் தெரியாமல் வெளியே சென்று வெளியுலகத்தில் நடக்கும் தவறுகளை பின் தொடர்ந்து வருகிறார்கள். மேலும் குழந்தை கடத்தல் செய்பவர்கள், வழிப்பறி திருடர்களை கண்டுபிடித்து கொடுக்கிறார்கள். ஆனால் இவர்கள் பிடித்துக் கொடுத்தவர்கள் எல்லாம் ஜெயிலில் இல்லாமல் சுதந்திரமாக வெளியில் இருக்கிறார்கள்.

இந்த விஷயம் ஜெயம் ரவிக்கு தெரிய வருகிறது. சின்னச் சின்ன குற்றங்களுக்குப் பின்னணியில் இருக்கும் பெரிய பெரிய ஆட்களை தேடிக் கண்டுபிடித்து அழிக்க வேண்டும் என்ற வெறியுடன் ஐ.பி.எஸ். அதிகாரியாக மாறு-கிறார் ஜெயம் ரவி.இந்த குற்றங்களுக்கு எல்லாம் தலைவ-னாக சமூகத்தில் பெரும் புள்ளியாக அரவிந்த் சாமி இருக்கிறார் என்று ஜெயம்ரவிக்கு தெரிய வருகிறது. இந்த இருவரும் ஒரு புள்ளியில் சந்தித்துக் கொள்கின்றனர். அதன்பிறகு தீமைக்கும், நன்மைக்கும் இடையே யுத்தம் ஆரம்பமாகிறது. இந்த யுத்தத்தின் இறுதியில் யார் வென்றார்கள் என்பதே தனி ஒருவன் படத்தின் மீதிக்கதை.படத்தில் ஜெயம் ரவி நேர்மையான ஐ.பி.எஸ். அதிகாரியாக நடித்திருக்கிறார். மித்ரன் கதாபாத்திரம் இவருக்கு கச்சிதமாக பொருந்தியிருக்கிறது. முந்தைய படங்களை விட இந்த படத்தில் நடிப்பில் களை கட்டியிருக்கிறார்.

வில்லனை நெருங்க திட்டம் தீட்டுவது, குற்றவாளிகளை பிடிக்க திட்டங்கள் போடுவது என ஒவ்வொரு இடத்திலும் நடிப்பால் பளிச்சிடுகிறார்.நயன்தாரா வெறும் ஹீரோயினாக இல்லாமல் படத்தில் முக்கிய கேரக்டராக வந்து நடிப்பில் பிரமாதப்படுத்தியிருக்கிறார். காதலன் மீது உரிமை கொண்டாடுவது, காதல் கொள்வது அவரவர் கதாபாத்திரங்களை சிறப்பாக செய்திருக்கிறார்கள். ரசிகர்களை மொத்தமாக தன் வசீகர நடிப்பால் அள்ளி சென்றிருக்கிறார் அரவிந்த் சாமி. இவர் பிறக்கும் காட்சி, எந்தவொரு வில்லனுக்கும் கிடைக்காத அறிமுக காட்சி. படத்தில் ஸ்டைலிஷ் வில்லனாக நம் கண்முன் நிற்கிறார்.

சித்தார்த் அபிமன்யூ என்ற கதாபாத்திரத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார். கதாநாயகன்களுக்கு இணையாக ஒரு ஸ்மார்ட்டான வில்லன் கிடைத்து விட்டார். குறிப்பாக ரசிகைகளுக்கு ரொம்ப பிடித்த வில்லனாக அரவிந்த்சாமி இருப்பார் என நம்பலாம். அந்தளவிற்கு தன்னுடைய நடிப்பால் ரசிகர்களை கவர்ந்திருக்கிறார்.முந்தைய படங் களிலிருந்து முற்றிலும் புதிய ஒரு கதைக்களத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் இயக்குனர் மோகன் ராஜா. இந்தியாவில் மருத்துவத்துறையில் நடக்கும் முறைகேடுக-ளின் பின்னணியில் நிகழும் கொலைகள், வழிப்பறி சம்பவங்கள், ஆள் கடத்தல்கள் என புதிய கோணத்தில் கொஞ்சம் விலாவாரியாக திரைக்கதை அமைத் திருக்கிறார்.

ஓர் அசலான புத்திசாலி வில்லன் கதாபாத்திரத்தை உருவாக்கி, மொத்த படத்தையும் சாதுரியமாக அரவிந்த் சாமி தோளில் வைத்திருக்கிறார். ஆதி இசையில் பாடல்கள் அனைத்தும் சூப்பராக அமைந்துள்ளது. பின்னணி இசையில் படம் முழுக்க 'தீமைதான் வெல்லும்' பாடலையே பயன்படுத்தியிருக்கிறார். ராம்ஜியின் ஒளிப்பதிவு படத்திற்கு மிகப்பெரிய பலம். இவருடைய ஒளிப்பதிவில் ஒவ்வொரு காட்சியும் அருமையாக இருக்கிறது. சேசிங் காட்சிகளில் இவரது கேமரா புகுந்து விளையாடியிருக்கிறது. மொத்தத்தில் 'தனி ஒருவன்' தனியாக வென்றான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# சண் ரெயிலறிங்

சௌகாரியமான உலகில் காலடி எடுத்து வையுங்கள் புதிதான இந்நாளில் அழகான தோற்றத்தில் அட்டகாசமாக நீங்கள் வருவதற்கு உயர்ந்த தேர்ச்சி பெற்ற தையலாளர்களின் கைவண்ணத்தில் ஆண்கள் , பெண்கள், சிறுவர்,சிறுமியருக்கான ஆடைகளை விரைவாக தைத்துப் பெற்றுக் கொள்ளலாம் .

**சண் ரெயிலறிங்கில் சிறப்பான ஆடைகளை தைத்து அணிந்தாலே மனதில் மகிழ்ச்சி பொங்கும்.**



இல,266, B.C பொன்னம்பலம் வீதி,யாழ்ப்பாணம்

தொ.இல: 0774745735


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுயதொழில் வழிகாட்டலில் அழகுக்கலை நிலையம் - கலாலயா

இன்றைய இளைய தலைமுறையினரிடம் சுயமாக தொழில் தொடங்கவேண்டும் என்ற ஆர்வம் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் அதற்கு சரியான வழிகாட்டுதல் இல்லாமலும் முதலீடு இல்லாமலும் சுய தொழில் கனவை குழி தோண்டிபுதைத்து விடுகின்றனர். சுய தொழில் செய்யமுடிவும் இளைய தலைமுறை முக்கியமாக திட்டமிடல் தொழில் துறை சம்மந்தப்பட்ட நுணுக்கங்கள் அனுபவசாலிகளின் வழிகாட்டல்கள் என்பனவற்றை கேட்டுத் தெரிந்துகொள்வதன் மூலம் செய்யும் தொழிலில் சிறந்தோங்க முடியும். அந்த வகையில் பலதடைகளையும் தாண்டி அழகுக்கலைப் பயிற்ச்சி நெறியைக் கற்பித்து பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தி 30 வருடங்களாக வெற்றிகரமாக பல ஆயிரக்கணக்கான மாணவிகளை பயிற்றுவித்து வெளியேறிவந்துள்ளது. கலாலயா என்னும் அழகுக்கலை நிலையம் 1985 ஆம் ஆண்டுகளில் மார்க்கண்டு சுதர்சன் அவர்களால் ஆரம்பிக்கபட்ட இந்த அழகுக்கலை நிலையம் இன்று வரை அவராலேயே தொடர்ந்து வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வருகிறது.





இடம்பெயர்வுகளினால் பல இழப்புக்களைச் சந்தித்த போதிலும் சோர்ந்துவிடாமல் விடா முயற்ச்சியுடன் தன் செயற்பட்டமையும் தனது குடும்பத்தாரின் வழிகாட்டலுமே நிறுவனத்தை உயர்த்திச் செல்ல ஏதுவாகின என்றார் பணிப்பாளர் சுதர்சன் அவர்கள் ஐசிங், பூ வேலை, கைவேலை, கூந்தல் அலங்காரம், உணவு தாயரித்தல், வர்ணம் தீட்டுதல், கோலங்கள் போடுதல், அழகுக் கலை என்ற அனைத்துப் பயிற்ச்சிகளும் இங்கே வழங்கப்பட்டு வருகின்றது. (எண்ணித்துணிககருமம்) என்ற வாக்கியத்திற்கு அமைய செயற்பட்டமையும் இறைவனதும் முதியோர்களின் ஆசியுமே இந்த நிறுவனத்திலிருந்து பலரும் பயன் பெற்று சுயதொழிலை மேற்கொள்ள வழிகாட்டி நிற்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 வீதம் கட்டணக் கழிவை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதும் பெண்களுக்கான சுய தொழில் கலையை ஆண் ஒருவர் வெற்றிகரமாக நடத்திவருவதும் வரவேற்கதக்க விடயமாகும். மேலும் இந்த நிறுவனத்திலேயே கல்வி கற்றமாணவிகளான அனுகூஷா,கவிதா போன்றோர் தற்போது 5 வருடங்களாக இந்த நிறுவத்திலேயே அழகுக்கலை ஆசிரியைகளாக கடமையாற்றிவருகின்றனர். அழகுக்கலையைக் கற்பதால் இருந்த இடத்திலேயே தம்மால் பணம் சம்பாதிக்கமுடிவதாகவும் அரசசேவையில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் போன்று தம்மால் சிறந்த வருமானத்தைப் பெற்று உழைக்கக்கூடியளவு சிறந்த வழிகாட்டலை அவர்களுக்கு இந்த அழகுக்கலைப் பயிற்சி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர். பெண்கள் அனைவருக்கும் சிறந்த தொழில் வாய்ப்பை இவ்வாறான பயிற்சிநெறிகள் ஊக்குவித்து சுயதொழிலுக்கு வழிகாட்டுகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.media

# Bridal Make-up is our Speciality







YOGIS
Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt.)Ltd.

## Our Beauty Services

**Bridal**

Dressing up of brides & Maids, Dance Make-up, Air brush Make-up, Hair Style and Dressing for any Occasion

**Ladies Hair**

Dressing Styling, Cutting, Straightening, Re-bonding, Perming, Tint & Highlights and Hair Treatments

**Ladies Beauty**

Facials, Pimple Treatments, Threading & Waxing, Manicure & Pedicure, Nail Art and Mehendi

## DR. (MRS). YOGINI SHANMUGANATHAN

Diploma in Asethetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make-up & Character Make-up (India)
Diploma in Advanced Modern Make-up Course with Air Brush Make-up (India)
Diploma in Home Economics (Srilanka)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ் மரக்காலை



சகல விதமான அரிவு மரங்களையும் ,பலகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

எம்.ஆர்.அனஸ் -077 2261251    எச்.டீன்-0777 610932

- கினிசப்பு
- மகோகனி
- கிறாண்டிஸ்
- பைனஸ்
- கம்பஸ்
- கொறா
- சீலிங்

இவை போன்ற இன்னும் பல மரவகைகளை உயர்ந்த உறுதியின் சின்னமாக எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.





இல,610 கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# NIKSHAN Hi-Fi Mobiles

No:281E, Clock Tower Road, Jaffna.

Tel:0772850811







கைத்தொலைபேசிகளின் உன்னத
அழகுடனும், நவயுகத்தின் ரசனையுடனும்
வடிவமைக்கப்பட்ட உத்தரவாதத்தோடு அமையப்
பெற்ற உலக தரத்துடனான
கைத்தொலைபேசிகளை வாங்கிக் கொள்கின்ற
அதே வேளை பழுதடைந்த உங்கள் தொலை
பேசிகளை சிறந்த தொழில் வல்லுணர்களால்
திருத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ARISTO

**Distributors & Dealers in Electronic, Electric, Children Cars/ Bikes, Clocks & Home Appliances**





நிறைவான இசை இன்பத்தை தருகின்ற பொக்ஸ் வகைகள், வாகனங்களுக்குப்
பொருத்துகின்ற DVD,பூபர்வகைகள் இதோடு இலத்திரனியல் பொருட்கள்,
ஹாஸ்குக்கர்கள்,அவன்வகைகள் மற்றும் கொஞ்சும் மழலைகள் மொழி
பேசுகின்ற சிறார்கள் பயன்படுத்துகின்ற கார்கள், சிறுவர்களுக்கான
துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றை தரமாகவும் உத்தரவாதத்தோடும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.




No.238, Kasthuriyar Road,Jaffna. Phone: 021 4545899

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Aircom E
Travelss & Tours

Air Ticketing
Visa Services
Travel insurance

Head Office: No,2A,Ratnam Road,Colombo-13
Tel: 011 4617109, 011 2444061 Fax:0094 11 2336446

Branch: No 299, Stanley Road,Jaffna,Srilanka.
Tel:021 221 9113, 021 4923 570, 077 505 2715

New Branch: 70 A Main Street Sinnakadai
(Near HNB Bank Mannar)
Tel:- 023 4924035 Mobile:0777310414

E-mail:aricom46@hotmail.com




No.299, Stanley Road,Jaffna. Tel:021 221 9113, 021 4923 570, 077 505 2715

ஆரம்பம் 1952

மலை அசைந்தாலும் தன் திறன் குன்றாத
63 வருடகால யாழ் மக்களின்
பாரம்பரியம் மிக்க சைவ உணவின் சாம்ராஜ்யம்



# மலாயன் கபே



சுத்தத்தின் செல்வன் என்றும் மக்களால் மகுடம் சூட்டப் பெற்ற அன்றும்! இன்றும்! என்றென்றும்!
மங்கா புகழ் பூத்த ஒரே நிறுவனம்

குறை இருந்தால் எம்மிடம் கூறுங்கள் நிறைவு இருந்தால் நண்பர்களிடம் கூறுங்கள்
(நாங்கள் எங்கள் உணவிற்கு அஜினா மோட் பாவிப்பதில்லை)

விசேட வைபவங்களுக்கு ஓடர் உடனுக்குடன் கவனிக்கப்படுவதுடன் லட்டு நல்கட்பால்கோவா
குளிர்பான வகைகள் பிரியாணி சாப்பாடு மசாலா தோசை போன்ற தொகையான
விசேட வைபவங்களுக்குரிய ஓடர் செய்துதரப்படும்
மாநகர சபை எல்லைக்குள் இலவசமாக உணவுப் பொதிகளை கொண்டுவந்து தரப்படும்

இல,36 38 பெரியகடைவீதி,யாழ்ப்பாணம். தொ.இல 021 222 2373 0777 917753
E-mail:satheskumar@yaho.com, web:www.malayancafe.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலையில் மயங்கியவள்
விலையிலும் மயங்கினாள்.

# சக்தி ஜவலர்ஸ்

## Shakthy jewellers

Manufacturers of gold jewels

புதிய மாநகரசபைக் கட்டடம், இல 80/4 கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
Tel: 021 221 7750, 077 239 5747

# விஜிதா எக்ஸ்பிரஸ்

## Vijitha Express



எதிர்பார்ப்பைத் தூண்டும் இனிமையான பயண அனுபவம் நீங்கள் செல்லும் இடம் எதுவோ அங்கே உங்களை குறித்த நேரத்தில் சுகமான பிரயாண வழவகைகளை செய்து தருகிறார்கள். தொலைக்காட்சி பார்த்தபடி செல்லுங்கள் உங்கள் இடங்களுக்கு எல்லாத் தேவைகளுக்கும் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.

இல,10 கந்தபுராண வீதி கந்தர்மடம், தொ.இல:0779757539

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரியாவிடை பெற்ற சரித்திர நாயகன் சங்கா



சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் தனது இன்னிங்ஸ் முடிவுற்றாலும் எதிர் காலத்தில் உங்களில் ஒருவனாக மைதானத்துக்கு வந்து போட்டிகளை ரசிப்பேன் என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், விக்கெட் காப்பாளரும், சிரேஷ்ட துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார கூறினார். இலங்கை – இந்திய அணிகளுக்கிடையிலான கொழும்பு பி. சரவணமுத்து கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டியின் பின் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து முழுமையாக விடைபெறும் அவர் ஊடகவியலாளர்களுக்கும், ரசிகர்களுக்குமாக கண்ணீர் மல்க வழங்கிய செவ்வியிலிருந்து....

முன்பு ரசிகர்களும் கிரிக்கெட் விமர்சகர்களும் கேட்கும் கேள்விதான் என் விளையாட்டு திறமைக்கு உந்து சக்தியாக இருந்தது யார் என்று. ஆரம்பத்திலிருந்தே என் பெற்றோர்கள் என்னுடன் இருந்து எனக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக் கொடுத்தார்கள். அவர்களுக்கு இந்நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என் பெற்றோர் நான் விளையாடுவதைப் பார்ப்பதற்கு வருவது குறைவு இன்று இங்கு வந்துள்ளார்கள். மேலும் என் சகோதர சகோதரிகள். என் நண்பர்கள், அதே போல் அன்புக்குரிய ரசிகர்கள் பட்டாளம் அனைவரும் இன்று நான் விடைபெறும் நாளில் கூடி இருந்து என்னை வாழ்த்துகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என் நன்றிகளைத் தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். என் கிரிக்கெட் வாழ்க்கையின் முன்னேற்றத் துக்கும், கிடைத்த கௌரவத்துக்கும் முக்கிய காரணமாக இருந்தவர்கள் என் இலட்சக் கணக்கான கிரிக்கெட் ரசிகர்களாகும். இந்த கௌரவம் அவர்களுடையது. அவர்களுக்கு மீண்டும் என் மனமார்ந்த நன்றிகள். இன்றுடன் எனது இன்னிங்ஸ் முடிவடைகின்றது.

நான் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் விளையாட மாட்டேன். ஆனால் உங்களுடன் கெத்தாராம, எஸ். எஸ். ஸி, பல்லேகலை மைதானங்களில் இலங்கை வீரர்கள் விளையாடுவதை ரசிப்பதற்கு வருவேன். நான் விடைபெறும் இப் போட்டியில் (இந்தியா வுடனான இரண்டாவது போட்டி) எங்களுக்கு வெற்றி பெற முடியாமல் போனது இது பற்றி எனக்கும் சற்றுக் கவலைதான் என்றாலும் விளையாட்டின் சுபாவம் இது தான். இந்திய அணி போது அதிகமாகவே அவர்கள் என்னைக் கவர்ந்தார்கள். அஞ்சலோ மெத்தியூஸ் சிறந்த தலைவர். தற்போதைய இலங்கை அணியும் நன்றாக விளையாடுகிறது. தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல் முன்னேற வேண்டும்.

விடை பெறும் போட்டியில் நன்றாக விளையாடவே அனைவரும் முயற்சிப்பர். துரதிர்ஷ்டவசமாக என் கடைசிப் போட்டியில் அணி தோல்வியடைந்தது. என் துடுப்பாட்டமும் இப் போட்டியில் நல்ல நிலையில் இருக்கவில்லை. நான் அவுஸ்திரேலிய வீரர் பிரெட்மன் விளையாடுவதைப் பார்த்திருக்கிறேன். அவர் மிகவும் நன்றாக விளையாடுவார். ஒவ்வொரு காலத்திலும் சிரேஷ்ட வீரர்கள் உருவாகிறார்கள்.

என்னை அவருடன் ஒப்பிட்டுப் பேசுகையில் சந்தோஷ மடைகிறேன். நான் இப்போட்டியின் இறுதியில் ஓய்வு அறைக்கு சென்று சக வீரர்களுடன் கைலாகு செய்யும் போது உண்மையிலேயே என் மனது அழுது புலம்பியது. என் கிரிக்கெட் வாழ்க்கையில் இனி இது போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என்பதை நினைக்கும் போது என்னை யறியாமலே என் கண்கள் பணித்தன. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் மறக்க முடியாத நினைவுகள் நிறையவுள்ளன. ஆனால் இந் நேரத்தில் என் பெற்றோர்கள், என் மனைவி, என் பிள்ளைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து மைதானத்துக்கு வந்திருப்பது இதுவே முதல் முறையாகும். அந்த வகையில் நான் விடைபெறும் போட்டியில் இதுவும் ஒரு விசேடமாகும்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எனக்கு நல்ல பல ஆலோசனைகளையும், என்னோடு இணைந்து எனக்கு பல வகையில் சேவைகளைச் செய்தவர் என் மனைவி யெஹாலி ஆவார். அத்தோடு அவர் எனக்கு நல்ல இரு பிள்ளைகளையும் கொடுத்துள்ளார். நான் சந்தித்த பந்து வீச்சாளர்களில் எனக்கு மிகவும் சவாலாக இருந்தவர் இந்திய பந்து வீச்சாளர் சஹீர்கான். இப்போட்டியில் அஸ்வின். இங்கிலாந்து அணியின் ஸ்வான் ஆகியோர் நான் சந்தித்த பந்து வீச்சாளர்களில் சவாலானவர்கள். மேலும் பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் சவால் மிக்கவர்.

நான் விளையாட வந்த ஆரம்பகாலத்தில் அவர் எனக்குப் பந்து வீசியுள்ளார். அவரின் பந்து வீச்சுக்கு முகம் கொடுப்பது மிகவும் கடினமானது. போதை ஒழிப்புப் பணியில் ஈடுபடக் கிடைத்தமையானது மிக மகிழ்ச்சியானது. நம் நாட்டு இளைஞர் யுவதிகளை போதைப் பாவனையிலிருந்து மீட்டெடுப்பது புண்ணிய கருமமாகும். மிகவும் இளவயதில்தான் இவர்கள் போதைக்கு அடிமையாகிறார்கள். அவர்களை மீட்டெடுப்பதற்கு நாம் அனைவரும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் சங்கக்கார கூறினார். சாதனை பற்றிய சிறு குறிப்புகள்: குமார் சங்கக்கார 1977 அக்டோபர் 27ம் திகதி மாத்தளை நகரில் பிறந்தார். இடது கை துடுப்பாட்ட வீரரான இவர் சிறந்த விக்கெட் காப்பாளராகவும் திகழ்ந்தார்.

2000ம் ஆண்டு ஜுலை மாதம் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதன் முதலில் சர்வ தேச கிரிக்கெட்டில் களமிறங்கினார். இவர் இலங்கை அணி சார்பாக 84வது டெஸ்ட் வீரராக அறிமுகமானார். அன்று முதல் சங்கக்கார ஓய்வு பெறும் வரை 134 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 38 சதங்களும், 52 அரைச் சதங்களும் உள்ளடங்களாக 12,400 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 11 இரட்டைச் சதங்களும் அடங்கும். இது அவுஸ்திரேலிய சிரேஷ்ட வீரர் டொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிரட்மென் பெற்ற அதிகூடிய இரட்டைச்சத சாதனைக்கு அடுத்த கூடிய இரட்டைச்சதங்களாகும். குமார் சங்கக்கார பெற்ற 12400 ஓட்டங்களானது டெஸ்ட் வரலாற்றில் வீரர் ஒருவர் பெற்ற 5வது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

மேலும் இடதுகை துடுப்பாட்ட வீரர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும். அவர் பெற்ற 38 சதங்களானது டெஸ்ட் வரலாற்றில் வீரர் ஒருவர் பெற்ற நான்காவது அதிகூடிய சத எண்ணிக்கை யாகும். மேலும் இடது கை துடுப்பாட்ட வீரர் ஒருவர் பெற்ற அதிகூடிய சதங்களாகவும் இது பதிவாகியுள்ளது. இவர் பல போட்டிகளில் இலங்கை அணியை வெற்றியின் பால் இட்டுச் சென்றுள்ளார். இவர் சொந்த மண்ணில் திறமையாக விளையாடுவதைப் போலவே வெளிநாட்டு மைதானங்களிலும் திறமையாக விளையாடியுள்ளார்.

சங்கக்கார அந்நிய மைதானங்களில் 53 போட்டிகளில் 53.36 சராசரியுடன் கூடிய 4888 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இலங்கை மண்ணில் 74 போட்டிகளில் 6780 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் டெஸ்ட் போட்டிகளில் மட்டுமல்லாது ஒருநாள் போட்டிகளிலும் பல சாதனைகளைப் புரிந்துள்ளார்.

இவர் 2000ம் ஆண்டு ஜுலை 20 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு எதி ராக முதலாவதாக சர்வதேச போட்டிகளில் களமிறங்கினார். கடைசியாக இவ்வருடம் அவுஸ்திரேலிய - நியூசிலாந்து நாடுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியுடன் ஓய்வுபெறும் வரை 404 ஒரு நாள் போட்டிகளில் பங்குகொண் டுள்ளார். இவர் ஒருநாள் போட்டிகளில் 25 சதங்கள், 93 அரைச் சதங்கள் உட்பட 14,234 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

அதிக பட்ச ஓட்டமாக 169 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். களத்தடுப்பிலும் சாதனைப் புரிந்துள்ள இவர் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 501 ஆட்டமிழப்புக்களுடன் இணைந்துள்ளார். இது உலக சாதனையாகும். இதில் 402 பிடிகளையும், 99 ஸ்டம்புக்களையும் செய்துள்ளார். இவர் ஒருநாள் போட்டி, டெஸ்ட் போட்டி, டுவெண்டி 20 போட்டி மூவகைப் போட்டியிலும் துடுப்பாட்டத்தில் மாத்திரமின்றி களத்தடுப்பிலும் திறமைகாட்டியுள்ளார்.

கடைசியாக நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் கூட அவர் தொடர்ச்சியாக இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, பங்களாபதேஷ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு எதிராக தொடர்ச்சியாக நான்கு சதங்கள் பெற்று உலகக் கிண்ணப் போட்டித் தொடர் வரலாற்றிலேயே தொடர்ச்சியாக நான்கு சதங்கள் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் உலக அளவில் பல விருதுகளையும் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார். அந்த வகையில் 2011 ஆண்டு முதன்மை கிரிக்கெட் வீரருக்கான விஸ்டன் விருதும், 2011, 2013ம் ஆண்டுகளுக்கான சர்வதேச கிரிக்கெட் கவுன்சினால் ஆண்டுக்கான சிறந்த ஒருநாள் வீரருக்கான விருதும், 2012ஆம் ஆண்டு சிறந்த டெஸ்ட் வீரருக்கான சர்வதேச விருதும். அதே ஆண்டு சிறந்த கிரிக்கெட் வீரருக்கான சர்வதேச விருதும், 2015ஆம் ஆண்டு முதன்மை கிரிக்கெட் வீரருக்கான விஸ்டன் விருதும் கிடைத்துள்ளது.

இது தவிர சியட் விருது, எல். ஜி. விருது, ஆசிய விருது என பல விருது-களையும் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் சிறந்த விளையாட்டு வீரர் மட்டுமல்ல நேர்மையான மனிதரும் கூட. ஆட்டமிழப் புகளின் போதும் அந்த நேர்மை தன்மையை நாம் நேரில் கண் டுள்ளோம். சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலும் இளம் வயதி லேயே உரையாற்றும் பாக் கியமும் இந்த அசகாய சூரனுக்குக் கிடைத்தது.

மேலும் பொதுவாக நாட்டுத் தலைவர்கள் விடை பெறும் விளையாட்டு வீரனுக்கு பிரியாவிடை அளிக்கும் போது தன் இருப்பிடத்துக்கு அழைத்து கௌரவிப்பதுதான் கடந்த காலங்களில் இலங்கை யில் வழக்கமாயிருந்தது. ஆனால் சங்கக்காரவின் விஷயத்தில், நாட்டுத் தலைவர் அனைவரும் மைதானத்துக்கே சென்று வாழ்த்தியது மட்டு மல்லாமல், உயர் பதவிகளையும் பெறுமாறு கோரிக்கை விடுப்ப தென்றால் சங்கக்காரவின் விளையாட்டுத் திறமைக்கு மட்டும் கிடைத்த கௌரவ மல்ல அவரின் மனிதாபிமானத் துக்குதான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# கெசியா பான்சி பலஸ்

## மொத்தச் சில்லறை வியாபாரம்

ஆலய பயன்பாட்டிற்குத் தேவையான பொருட்கள்,
இல்ல பயன்பாட்டிற்கு தேவையான பாத்திர வகைகள், அழகு சாதனப் பொருட்கள், மனம் விரும்பும் அன்பளிப்புப் பொருட்கள், என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்கின்ற அதே வேளை பொருட்கள் மற்றும் கிரியைகளுக்காக நினைவுப் பொருட்களை பெயர் பொறித்தும் பெற்றுக் கொள்ளலாம்.








இல,297 கே.கே.வீதி யாழ்ப்பாணம். தொ.இல: 021 222 4484, 0775832197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Office:021 224 2422 / Hotline:077 036 6300 E-mail:nkfunctionhall@gmail.com / Web:www.nkfunctionhall.com

# சந்நிதி முருகன்

## வேக்சொப் அன் சேவிஸ் ரேசன்



டேவிற் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டின் சேவிஸ் டீலர் மற்றும் உதிரிப்பாக விற்பனையில் முகவராண்மை பெற்ற தனிச்சிறப்புகுரியவர்கள் மெக்கானிக்,சேவிஸ் மற்றும் திருத்த வேலைகள் அனைத்தையும் திறம்பட எம்மிடம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.


உல்லாசமான நாட்பொழுதுகளை இன்மையான பிரயாண அனுபவங்களின் ஊடாக பெற்றிட

**சந்நிதிமுருகன் அன் டீரவல்ஸ்**

காத்திருக்கின்றது.







இல,102, பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம். (வீரமாகாளி அம்மன் கோவிலருகாமை)

தொ.இல:021 222 5202, 021 222 8076

# Yarl Pardy

## Your Home in Jaffna

# யாழ் பாடி

பெருமை வாய்ந்த எமது யாழ் மண்ணின் சுவையின் புதுமையை அறியத்துடிக்கும் உங்களுக்கு பிரதி சனி, ஞாயிறு நாட்களில் காலை 10.00 மணியில் இருந்து யாழ் பாடியின் ஊட்டச் சத்துக்கள் நிறைந்த **விசேட கூழ்,** எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்



இயற்கை எழில் கொஞ்சும் அமைதியான அமைவிடத்தில் , ஆரோக்கியமான நீங்கள் ஓடர் செய்யும் உணவுகளோடு உங்களுக்கான நிறைந்த வசதிகளோடு தங்குமிட அறைகள் கவர்ந்திழுக்கும் வசதிக-ளோடு யாழ் பாடியில்

No.49-51 Amman Road, Nallur, Jaffna.
Email:tysunda@gmail.com
House Keeper: 0759 875 800

Tel:-021 222 6868
075 934 0026
077736 0353

# Colombo Hut

*Rooms-Homes-Tours*

கொழும்பிலும் உங்களுக்குத் தேவையான தங்குமிடங்களை சகல வசதிகளுடனும் பெற்றுக் கொள்ளலாம்.

Rani -House Keeper 0756 530 348

Tel:- 0115 055 055
0777360 353
0759 340 026

9/3 16th Lane, Colombo-03
Srilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SMART KINGS (PVT)LTD.




- கட்டடங்கள் கட்டுவதற்கு அத்திபாரம் அகழ்தல்
- கிணறு, மலசல குழி, குளங்கள் அகழ்தல்
- மணல், கல், ABC கிறவல் மணல் என்பவற்றை நியாயமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
- காணிதுப்பரவு செய்தல், கட்டடம் உடைத்தல்
- அண்டக் கிறவுண்ட் பிறேக்கர் மூலமாகவும் அனைத்து விதமான வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
- JCB, Excavator, Roller Wacker, Hilti, Concrete Mixer என்பனவும் மணித்தியால அடிப்படையிலும் வாடகைக்கு கொடுக்கப்படும்.

(Hiring of Earth Moving Machineries)

Civil Engineering Contractors



Metal, Sand, Gravel,
ABC, Rubble, Quary Dust Suppliers

No. 12 Point Pedro Road,jaffna
No.148 Station Road, Jaffna. (யாழ்ப்பாணம் Railway Station முன்பாக)
Tel:021 7306099 Fax: 021 4546699


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org